## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.12.2023 திருவருகைக் கால முதல் ஞாயிறு - திருப்பலி 02

04.12.2023 புனித பிரான்சிஸ் சவேரியார் - திருப்பலி 03

05.12.2023 அருளாளர் பிலிப்பு ரினால்டி - திருப்பலி 04

10.12.2023 திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு - திருப்பலி 06

12.12.2023 குவாதலூப் நகர் புனித கன்னி மரியா - திருப்பலி 07

13.12.2023 புனித லூசி - திருப்பலி 09

17.12.2023 திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி 10

23.12.2023 கான்டி நகர் புனித ஜான் - திருப்பலி 12

24.12.2023 திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு - திருப்பலி 13

25.12.2023 கிறிஸ்து பிறப்பு விழா (காலை) - திருப்பலி 14

27.12.2023 புனித யோவான் விழா - திருப்பலி 16

28.12.2023 புனித மாசில்லாக் குழந்தைகள் தினவிழா - திருப்பலி 17

31.12.2023 திருக்குடும்பம் பெருவிழா - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


புதுவருட இரவு ஆராதனை 20

மீட்க வந்த மீட்பர் 24

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.12.2023 திருவருகைக் கால முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. எசா. 63: 16-17, 64: 1,3-8 II. 1 1கொரி. 1: 3-9 மாற்கு 13: 33-37

ஆண்டவரில் அன்புறவுடன் வாழும் சகோதர சகோதரிகளே, இன்று நாம் அனைத்து புனிதர்களின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு, அவரைப் பின்பற்றி அன்பு, அமைதி, இரக்கம், பகிர்தல், மன்னிப்பு, சகோதரத்துவம், நம்பிக்கை இவற்றிற்கு முன்மாதிரியான வாழ்வு வாழ்ந்த பலரில், ஒரு சிலரின் சான்றை மட்டும் எடுத்துக் கொண்டு திருஅவை புனிதராக அறிக்கையிட்டது. இன்றைய முதல் வாசகத்தில் சொல்லப்பட்டதுபோல எண்ணிலடங்காதோர், கடவுளின் அருளாலும், ஆட்டுக் குட்டியாம் கிறிஸ்துவாலும் மீட்படைந்திருக்கின்றனர். அவர்கள் கடவுளோடு இணைந்துள்ளனர், நிறைவு பெற்ற நீதிமான்களாக இருக்கின்றனர். "புனிதர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபொழுதும், இப்போது விண்ணகத்திலும் கடவுளோடும், கிறிஸ்துவோடும் இறையருளால் நிறைந்து இறையன்புக்கு சான்று பகர்பவர்களாக மூவொரு கடவுளின் புகழ்ச்சிக்காகவும், மகிமைக்காகவும், மாட்சிக்காகவும் கிறிஸ்துவில் ஒரே குடும்பமாய் திருஅவையை உருவாக்குகின்றனர்".

இவர்களோடு நாம் உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும், அவர்களின் பரிந்துரையையும், பாதுகாப்பையும், பெற்றால் மட்டும் போதாது, அவர்களின் வாழ்வு முறையையும் நாம் பின்பற்றி வாழவும், வளரவும் வேண்டும். இதையே இன்றைய விழாவும், 2ம் வாசகமும், நற்செய்தியும் அழுத்தமாக நமக்கு கற்பிக்கிறது. மனிதர்களை புனிதர்களாக மாற்றவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். நாம் இயேசுவுக்கு கீழ்ப்படிய கற்றுக்கொள்வோம். அந்த கீழ்ப்படிதல் எல்லா நலன்களையும் அருள்வாழ்வையும் நம்மிடம் கொண்டுவரும். அப்போது நாமும் இறையருள் பெற்ற புனிதராக வாழ முடியும் என்ற நம்பிக்கையில் அனைத்துப் புனிதர்களோடும் இணைந்து இப்பலியை ஒப்புக்கொடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மீட்பளிக்கும் இறைவா, உமது மீட்புப் பணியை தொடர்ந்து தம் சொல்லாலும் செயலாலும் நிறைவேற்றும் திருஅவையின் பணியாளர்களை உம்பதம் படைக்கின்றோம். அவர்கள் உம்மோடு எப்போதும் அருள் வாழ்வில் நிலைத்திருந்து மக்களை நல்வழியில் நடத்தியருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் இறைவா, எம் நாட்டுத் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை மத, இன, மொழி வேறுபாடின்றி மனித நேய வழியில் நடத்திச் செல்ல நீதியுள்ள, நேர்மையுள்ள இருதயத்தை அவர்களுக்கு வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. மாற்றம் தரும் இறைவா, புனிதர்கள் அனைவரும் விண்ணகத்திலிருந்து வந்தவர்கள் அல்ல, மாறாக, மண்ணகத்தில் வாழும்பொழுதே விண்ணக வாழ்வை வாழ்ந்தவர்கள் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். இங்கு கூடி செபிக்கும் நாங்கள், எங்களின் வாழ்வை இறைவனோடும், புனிதர்களோடும், இணைந்து வாழும் வாழ்வளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. விடுதலை நாயகனே எம் இறைவா, புனித வாழ்வில் தங்களை இணைத்துக் கொள்ள இயலாதவர்கள், பாவத்திற்கு அடிமைப்பட்டு விடுதலைக்காக ஏங்குவோர், ஏழ்மை, வறுமை, நோய், பிணி எனும் தடைகள் புனித வாழ்வுக்கு சவாலாக இருப்பதால், இவைகளைக் களைந்து விட்டு உம் புனித வாழ்வில் நாங்களும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.12.2023 புனித பிரான்சிஸ் சவேரியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவில் பிரியமானவர்களே, புனிதர்கள் யாவரும் நம்மைப் போன்று மண்ணில் மானிடராய் பிறந்து, வாழ்ந்தவர்கள். புனித லொயோலா இஞ்ஞாசியார் "உலகையே ஆதாயமாக்கினாலும் மனிதர் தம் ஆன்மாவை இழப்பாராகில் அதனால் அவருக்கு வரும் பயனென்ன?" என்ற இறைவார்த்தைத் தத்துவமும், கலைத்துறையில் முதுகலைப்பட்டமும் பெற்று விரிவுரையாளராகப் பணியாற்றி, புனித பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்வை திசைத் திருப்பினார். 1506ம் ஆண்டு 7ம் நாள் ஸ்பெயின் நாட்டிலுள்ள புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்தார். யுவான் தெயாசு, டோனா மரியா என்ற தம்பதியின் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். தன்னுடைய 9ம் வயதில் தந்தையை இழந்த இவர் தாயின் பராமரிப்பிலேயே அரண்மனையில் படித்து வந்தார். ஸ்பெயின் மற்றும் பாஸ்க் மொழிகளில் புலமைப் பெற்றிருந்தார்.

1925ம் ஆண்டு பிரான்சிஸ் கல்லூரியில் பயிலும்போது இனிகோ என்ற லொயோலா என்பவர் குருவாவதற்காக அதே கல்லூரியில் படிக்க சேர்கிறார். அவர் கடவுளுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவருடன் ஏற்பட்ட நட்பால் அவர் கூறும் இறைவார்த்தைகள் இவரது மனதில் ஆழமாக்க பதியப்பட்டது. இதனால் தனது பணம், புகழ், பட்டம், ஆசை, ஆடம்பரம், உலக இன்பம் அனைத்தையும் துறக்க வேண்டுமென்றும் தானும் ஒரு குருவாக வேண்டும் என்று விரும்பினார். இறைமகன் இயேசுவின் பணியை அவரது இறைவார்த்தையை எங்கும் அறிவிக்க வேண்டுமென்று எண்ணினார். பின்னர் இவர்கள் இருவரும் இணைந்து "இயேசு சபையை" தொடங்கினர்.

1542 மே மாதம் 6ம் நாள் கோவாவை வந்தடைந்தார். முதல் நான்கு மாதங்கள் கோவாவிலும் பின்னர் தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழகக் கடற்கரைக் கிராமங்களில் தனது இறைப்பணியை செய்துவந்தார். மிகக்

குறுகிய காலவேளையான ஒரு வருடத்திற்குள் 45 சிறிய கிறிஸ்தவ ஆலயங்களை அவர் நிறுவினார். 1544ல் திருவிதாங்கூரை ஆண்ட ஜெயசிம்ம நாட்டு மூத்த திருவடிகளுக்கும் விஜய நகரப்படைகளுக்கும் இடையே ஏற்பட்டப் போரில் புனித சவேரியார் குருசையும், செபமாலையும் உயர்த்திப் பிடித்து செபித்து வெற்றியடையச் செய்தார். 1553ல் டிசம்பர் மாதம் புனித சவேரியாரின் உடல் கோவா வந்தடைந்தது. 450 வருடங்களைக் தாண்டிய பின்னரும் அழியாமல் இன்றும் இப்புனிதரின் உடல் மக்கள் பார்க்கும் படியாக வைக்கப்பட்டுள்ளது. இவரின் ஆழ்ந்த இறைபக்தியை நாமும் பெற இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. இறை ஊற்றாகிய எம் இறைவா, புனித சவேரியாரைப் போன்று இன்று திருஅவையை வழிநடத்திக்கொண்டிருக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் அழியா ஆன்மாவோடும், வாழ்வு தரும் இறைவார்த்தையை நம்பிக்கையோடும் மக்களுக்கு எடுத்துரைத்து திருஅவையை கட்டிக்காக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பிறப்பதும் இறப்பதும் உம் திருவுளமே, மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் புனித சவேரியாரைப்போன்று மனித நேயத்தோடும், அன்போடும், ஒற்றுமையோடும், கருணை உள்ளம் கொண்டவர்களாக வாழ உம் தூய ஆவியாரின் அருளைப்பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. காணாமல் போன ஆட்டை ஆயன் தேடி அலைவதுபோல நீர் எங்களை உம் கண்ணின் இமைபோல் காப்பாற்றுகின்றீர் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாகவும், பலவிதமான நோயினாலும், துன்பங்களாலும், கடன் பிரச்சனைகளாலும், வாழ வழியின்றி தவிப்போரை நீர் கண்ணுற்று அவர்களை உம் கருணையின் கரங்களால் அரவணைத்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 05.12.2023 அருளாளர் பிலிப்பு ரினால்டி திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் அருளாளர் பிலிப் ரினால்டி அவர்களின் விழாவை கொண்டாடுகின்றோம். இத்தாலியின் அலக்சாண்டிரியா மாநிலம், லுமன்பொராத்தோ என்னுமிடத்தில் பிறந்தவர், தமது 22ம் வயதில் தொன் போஸ்கோவைச் சந்தித்தபோது அவரால் பெரிதும் கவரப்பட்டார். இவர் குருவாகியவுடன், குருமடத்தில் புதிய மாணவர்களின் உருவாக்கத்திற்கான பொறுப்புகளை ஏற்றார். பின்னாலில்

ஸ்பெயின் நாட்டின் சர்ரேயாவின் சலேசியக் குடும்பத்திற்கு இயக்குநராக, தந்தை ரூவா அவர்களால் நியமிக்கப்பட்டவர், தொடர்ந்து அதன் மாநில தந்தையாகவும் உயர்த்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டின் சலேசியச் சபையை வளர்த்தெடுப்பதில் இவரது பங்கு அளவிடமுடியாது. பலரது பாராட்டுக்கும் போற்றுலுக்கும் சொந்தக்காரரனார் தந்தை. ரினால்டி. சலேசிய சபையின் முதன்மை குருவாக உயர்த்தப்பட்டவர், அவரது பணிக்காலத்தில், வேலை செய்யும் இளம் பெண்களின் ஆன்ம, சமூக நலன்களில் துணை நிற்கும் பொருட்டு உருவாக்க மையங்களை நிறுவினார். உணர்வுப்பூர்வமான, சிக்கல்கள் நிறைந்த காலக்கட்டங்களில் அச்சகத் தொழில்களை நிறுவி, சலேசியச் சகோதரிகளுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், ஆதரவாகவும் திகழ்ந்தார்.

சலேசிய உடனுழைப்பாளர் இயக்கத்தில் ஊக்கமும் ஆக்கமும் தந்து வந்தார். அதேபோன்று ஆண் பெண் இருபாலருக்குமான முன்னாள் மாணவ அமைப்பை ஏற்படுத்தி வெற்றி கண்டார். தந்தை ரினால்டி, உலகில் ஓர் புதிய வடிவமான அர்ப்பண வாழ்விற்கான வாய்ப்பிருப்பதை உணர்ந்து, அதனை நடைமுறைச் சாத்தியமாக்க, "தொன் போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர்கள்" என்ற குழுவை நிறுவினார். 1922ல் சலேசியர்களின் உலக தலைவராக தேர்வு செய்யப்பட்டார். தொன் போஸ்கோவை பின்பற்றி செயல்படுவதில் தமது ஆற்றலனைத்தையும் செலவிட்டார். சலேசிய சபை பற்றிய படிப்பை வளர்த்தெடுப்பதோடு, சலேசிய ஆன்மீக வாழ்வை புதுப்பிப்பதில் பெரிதும் பங்காற்றினார். இவரின் நினைவு நாளை சலேசியர்களோடு நாமும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் இந்நாளில் அவரைப் போன்று நம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக முக்கியத்துவம் தருபவர்களாகவும், அதன் வழியாக புனிதத்துவத்தை அடையவும் தொடர்ந்து இத்திருப்பலியில் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை தங்களின் வாழ்வின்மூலம் செயல்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் ஆழத்தை காட்டிய இறைவா, எதிர்பாரா நிகழ்வுகளையும் தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும் அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது கடவுளின்மீது அசைக்க முடியா நம்பிக்கை கொண்ட இயேசுவைப்போல அவரின் மனநிலையோடு எமது வாழ்வை அணுக தேவையான ஆற்றலால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.12.2023 திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 40: 1-5,9-11 II. 2பேதுரு 3: 8-14 மாற்கு 1: 1-8

ஆண்டவருக்காக நம்மை ஆயத்தமாக்க, நம் பாதைகளை செம்மையாக்க, திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு நம்மை அழைக்கிறது. திருவருகைக்காலம் மனமாற்றத்திற்கான காலம், பகைமையை துறந்து நட்புறவில் இணைக்கும் காலம். இன்று அமைதியின் ஞாயிறு என்று அழைக்கப்பட்டு மெழுகுத்திரி ஏற்றப்படுகிறது. அமைதி என்னும் மெழுகுத்திரியை ஒளியேற்றி அமைதியின் அரசராகிய கிறிஸ்துவை நம் மத்தியில் வரவேற்று இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா, கிறிஸ்துவின் பிறப்புக்காக நம் வழியை ஆயத்தமாக்க கோணலான வாழ்வை நேராக்க, கரடுமுரடான பாதையை செம்மையாக்க அழைக்கிறார். அவ்வாறு நம் வழிகள் செம்மையாகும்போது இறைவன் தம் மந்தையின் ஆடுகளாக நம்மை சேர்த்துக்கொள்வார். நம்மைத் தம்தோளில் தூக்கி சுமப்பார். ஆண்டவரின் பாதையைக் கண்டுணர்ந்து அவரை மட்டுமே நம் இதயக்குடிலில் குடியேற்ற எசாயா அழைப்பு விடுக்கிறார். இரண்டாம் வாசகத்தில் புனித பேதுரு யாரும் அழிந்து போகாமல் மனம்மாற வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார் என்பதை தெளிவுப்படுத்துகிறார். நாம் பாவம் செய்துவிட்டோம் என்பதால் கடவுள் ஒருபோதும் நம்மை வெறுப்பதில்லை, ஏற்றுக்கொள்ள மறுப்பதுமில்லை. கடவுள் ஒருவரை வெறுக்கும் அளவுக்கு ஒருவன் பாவம் செய்ய முடியாது என்று புனித அகுஸ்தினார் கூறுகிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் திருமுழுக்கு யோவான் "பாவ நிலையிலிருந்து மனமாற்றமடைந்து திருமுழுக்கு பெறுங்கள்" என பறைசாற்றுகிறார். ஏனெனில் பாவம் பரவலாக மக்களிடையே காணப்பட்டது. மக்கள் நல்லாயன் இல்லா ஆடுகள்போல் தவித்தார்கள், பலர் பாதை தெரியாமல் பாவத்தில் விழுந்தார்கள். மனம்மாற வேண்டுமென்ற சிந்தனையை பெறும்வரையில் அவர்கள் விருப்பப்படி வாழ்ந்தார்கள். பின் மனமாற்றம்தான் ஆண்டவரின் எல்லையில்லா அன்பும், கருணையும் பெற்றுத்தரும் என்று நம்பி திருமுழுக்கு பெற்றார்கள். மனம்மாறுவது என்பது கடவுளோடும், அயலாரோடும், படைப்புகளோடும், நம்மோடும், நமது வாழ்வோடும் உள்ள உறவைச் சரிசெய்து புதுப்பிப்பதாகும். நாமும் நம்மிடமுள்ள பாவமனைத்தையும் போக்கி, உயிருள்ள ஆலயங்களாக உருமாற்றமடைய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

4. நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டுமென்று கூறிய ஆண்டவரே, கிறிஸ்துவின் வருகைக்காக மக்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் திருமுழுக்கு யோவானைப்போன்று, தன் நற்செய்தி அறிவிப்பு பணியில் பலரின் கரடு முரடான வாழ்வையும், சீராக்க, தூய்மையாக்க வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. அமைதியின் அரசரே எம் இறைவா, உலகில் அமைதி நிலவவும், நாடுகளுக்கிடையே சமாதானம் நிலவவும் செபிக்கின்றோம். நாம் வாழும் பங்குத்தளத்திலும், பணித்தளத்திலும், இல்லத்திலும், அருகில் வசிக்கும் குடும்பத்திலும், முறிந்த உறவுகளை புதுப்பிக்க ஆயத்தமாக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

6. ஆயனைப்போல் எங்களை வழிநடத்துபவரே எம் இறைவா, இவ்வுலக ஆசைகளால் வழிதவறி தடுமாறும் இளையோர்கள் தம்வாழ்வில் நல்ல குறிக்கோளுடன் வாழவும், உமது ஆற்றலைப்பெற்று சீரழிந்த வாழ்வை சீராக்கவும், வாழ்வில் வெற்றிப்பரிசை தட்டிச்செல்லக்கூடிய தகுதி பெற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

7. நீதியின் அரசரே எம் இறைவா, இந்நாட்டில் நீதிநிறைந்த அரசாட்சி நிலவவும், எங்கும் அமைதிச்சூழல் ஏற்படவும் நாட்டில் உள்ள தலைவர் அனைவரும் பாடுபடவேண்டுமென்றும் எம் தலைவர்களை சமாதானத்தின் கருவிகளாக மாற்றிட தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.12.2023 குவாதலூப் நகர் புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் இனிய திருக்குலமே, இன்றைய தினம் நம் திருஅவை கன்னித்தாய் அன்னை குவாதலூப் விழாவினைச் சிறப்பிக்கின்றது. நமது தாய் திருஅவை 1531ல் புனித ஜீவான் டியாகோ என்பவருக்கு டிசம்பர் 9ம் நாளிலும் பின்பு 12ம் நாளிலும் மெக்சிகோ நகரிலுள்ள தெபேயாக் மலையில் காட்சியளித்தார். முதலில் பயந்த ஜீவான் டியாகோ பின் அன்னையிடம் பேசியபோது தனக்கு மலையின் அடிவாரம் ஒரு ஆலயம் எழுப்ப கேட்டுக்கொண்டார். அன்னைதான் கடவுளின் தாய் என்றும் கூறினார். அஜீவான் டியாகோ உடனடியாக அந்நகரின் ஆயரிடம் சென்று அன்னை தனக்கு உரைத்ததை கூறினார். ஆயர் அதை நம்ப மறுத்து அன்னையை சந்திக்கும்போது அவரை அடையாளம் காட்டும் விதமாக ஏதாவது தடையம் கொண்டு வருமாறு கூறினார். டிசம்பர் 11ம் நாள் அன்னை சந்திக்க முடியாமல் தனது மாமாவின் உடல்நலத்தைக் குணமாக்க

விரும்பி வேறுவழியாக சென்றபோது மறுபடியும் அன்னை டியாகோவிற்கு காட்சியளித்தார். அன்னையிடம் தன் மாமாவின் உடல்நலமின்மையை கூறியபோது அன்னை அவர் நற்சுகம் பெற்றுவிட்டதைக் கூறினார். பின் ஆயரின் கோரிக்கையை கூறியபோது "டியாகோவை மலைஉச்சிக்கு சென்று ரோஜா மலர்களை பரித்து வரச் சொன்னார். உச்சிக்குச் சென்று கண்டபோது வறண்ட அந்தப் பகுதியில் ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்குவதை பறித்து தன் மேலங்கியில் கொண்டு வந்து அன்னையிடம் காண்பித்தார்.

அன்னை அதனை ஆயரிடம் காண்பிக்க கூறினார். வரும் வழியில் தன் மாமா குணமடைந்ததை அறிந்து உடனே ஆயரைச் சந்தித்து நடந்ததைக் கூறி, தன் மேலங்கியில் பொதிந்து வைத்திருந்த மலர்களை தரையில் கொட்டினார். அம்மலர்களில் அன்னையின் அழகிய உருவம் காட்சியளித்தது. ஆயரின் அனுமதியில் தனிப்பட்ட சிற்றாலயத்தில் தனது மேலங்கியை வைத்திருந்தார். பின்னர் அதனை ஊர்வலமாக எடுத்துச் சென்று தெயோக் மலை உச்சியில் சிறு ஆலயம் அமைத்து அதனை வைத்தார்கள். அதை எடுத்துச் சென்றபோது காயமடைந்த ஒருவர் புதுமையாக குணமடைந்தார். புனித ஜீவான் டியாகோவின் மேலங்கி இன்று மெக்சிகோவின் புனித அடையாளமாக திகழ்கின்றது. குவாதலூப் அன்னை தென்அமெரிக்க மெக்சிகோவின் பாதுகாவலியாக திகழ்கின்றார். பல திருத்தந்தையர்கள் அன்னையின் ஆலயத்திற்கு வருகைத்தந்து சிறப்பித்தனர். 1736ல் மூளைக் காய்ச்சல் மெக்சிகோவில் ஏற்பட்டு அதிகளவில் மக்கள் இறந்து போனார்கள். மக்கள் குவாதலூப் அன்னையை நாடி செபித்தார்கள். நோய் அந்நகரைவிட்டு மாயமாய் மறைந்தது. "குவாதலூப்" என்றால் பாம்பின் தலையை நசுக்குபவள் என்று பொருள். மெக்சிகோவின் அன்னை குவாதலூப் திருத்தலம் உலகின் மூன்றாவது பெரிய திருத்தலமாக கொண்டாடப்படுகிறது. இந்நன்னாளில் அன்னையின் முன்மாதிரியான வாழ்வைப் பின்பற்றி வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இயேசுவின் சாட்சிகளாய் உலகிற்கு நற்செய்திப் பணியினையும், திருஅவையின் மாண்பையும் காத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மகிமையின் தேவனே இறைவா, திருஅவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உம் பிள்ளைகளை சமர்ப்பிக்கின்றோம். உமக்கேற்ற வழியில் நடவாமல், உம்மைவிட்டு வெகுதொலைவில் சென்று, தங்களின் வாழ்வை சீரழித்துக்கொண்டிருக்கும் நாங்கள் எங்களின் தவறை உணர்ந்து மீண்டுமாய் உம்மை பற்றிக்கொள்ளும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. சகோதர பாசத்தோடும், மனித நேயத்தோடும் வாழ நீர் எங்களை உருவாக்கினீர் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக வாழவும், உமது திருத்தாயான குவாதலூப் அன்னையின் நோய்தீர்க்கும் அருமருந்தாக செயல்படுவதுபோல் நாங்களும் பிறரின் தேவையை உணர்ந்து, நோய்த்தீர்க்கும் மருத்துவர்களாக நாங்கள் செயல்பட உமதருளைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.12.2023 புனித லூசி திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று புனித பிரகாசியம்மாள் என்கிற லூசியா அவர்களின் விழாவை திருஅவையின் இறைமக்களாகிய நாம் நினைவுக் கூர்ந்து சிறப்பிக்கின்றோம். லூசியா என்றால் ஒளி எனப்பொருள். அதனால்தான் பிரகாசமாய் ஒளிர்வதால் பிரகாசியம்மாள் எனப் பெயர் பெற்றார். இத்தாலியில் சிருகாசு என்ற ஊரில் மிக உயர்ந்த கிரேக்க குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதில் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் இறைபற்றுடன் வளர்ந்தார். இளவயதில் இருந்தே தன்னை இறைப்பணிக்கு அர்ப்பணிக்க எண்ணிக் கொண்டிருந்தார். அவரது அன்னையோ ஒரு வாலிப பிரவு ஒருவருக்கு மணமுடித்துத் தருகிறேன் என உறுதி தந்திருந்தார்.

தாய்க்கு மிகுந்த இரத்தப்போக்கு ஏற்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டது. அப்போது புனித ஆகத்தம்மாள் கல்லறையை சென்று பார்த்து செபித்து வரலாம் என புனிதை விரும்பி அனுமதி கேட்க அவரும் சம்மதித்துஇருவரும்அங்குசென்றனர்.அன்றுஇரவுஅங்குதங்கியிருந்தார். அப்போது ஆகத்தம்மா கனவில் இவரிடம் உன் தாய் குணமாக உனது செபமும் மன்றாட்டுமே போதுமானது. உனது தாய் நலமடைவார், நான் தேவையில்லை உனது கற்பு எனும் லீலி மலரை இறைவனுக்கு அர்ப்பணம் செய். அவ்வளவு தூய்மையாக உள்ளாய். சிரகாசில் உனக்கான ஓரிடம் நிச்சயம் உண்டு எனக் கூறி மறைந்தார். அதேப்போல் தாயார் முழுசுகம் பெற்றார், அன்னையிடம் அனுமதி கேட்டார். மனமில்லாவிட்டாலும் தான் சுகம் பெற்றதை உணர்ந்து சம்மதித்தார். இவர் தனது சொத்து முழுவதையும் விற்று ஏழைகளுக்கு உதவி செய்தார். இதனால் கடுங்கோபம் கொண்ட அந்த வாலிப பிரபு இவரிடம் கடுமையாக நான் உன்னை உயர் அதிகாரியான பிரிபெக்ட் பங்காரியூசிடம் நீ கிறித்தவர் எனக்குற்றம் சுமத்தி ஒப்படைப்பேன். அவர் விலைமகளிர் இருக்குமிடத்தில் உனை தள்ளுவார் என எச்சரித்தார். புனிதரோ தீர்க்கமாக எனக்கு இறைத்துணை உண்டு. தூய வாழ்வு வாழ்வோருக்கு சரியான நேரத்தில் சரியான வார்த்தைகளை கொடுத்து தூய ஆவியார் துணை நின்று காப்பார். நான் இறைவனின் ஆலயம் எனது விருப்பத்திற்கு மாறாக நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் இருமடங்கு வெற்றிக் கிடைக்கும் என்றார்.

வாலிப பிரபு கிறித்தவர் என குற்றம் சுமத்துவேன் எனக் கூறியதற்கு காரணம் உண்டு. கொடுங்கோலன் பேரரசன் தியாக்கிலேசியனின் ஆட்சி நடந்தது. இரத்த ஆறு ஓடின காலம். அதனால்தான் லூசியாவை விலை மகளிர் உள்ள இடத்திற்கு கடத்த இவரை இழுத்தனர், அசைக்க முடியவில்லை. அதனால் பல சித்ரவதைகள் செய்தனர். அடித்து உதைத்தனர். கொதிக்கும் தாரை இவர்மேல் ஊற்றினர். தீயில் தூ க்கிப் போட்டனர். கண்களைப் பிடுங்கினர், இத்தனையிலும் இறைவன் காப்பாற்றினார். இப்புதுமைகள் மக்களுக்குத் தெரிந்தால் அனைவரும் கிறித்தவர்களாக மாறிவிடுவர் என அஞ்சி பின் அவரை கூரான கத்தியால் தொண்டையில் குத்திக் கிழித்துச் சாகடித்தான். இவரை கத்தோலிக்கர், லூத்தரன், ஆங்கிலிக்கன் கிழக்கு மரபு வழி கிறித்தவர்கள் அனைவரும் இவரை புனிதராக கொண்டாடுகின்றனர். நாம் சிறப்பு செய்து வழிபாட்டோடு நிறுத்திவிடாமல் பற்றுறுதியோடு செயல்பாட்டிலும் இணைந்து செயல்படுவோம் என உறுதியேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, உமது திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களாகிய அனைவரும் விண்ணுலகிற்கு மகிமையும் மண்ணுலகிற்கு மகிழ்ச்சியும் தரக்கூடிய பணிகளில் ஈடுபட்டு உழைத்து திருஅவை சமூகம் இரண்டும் சிறப்புற வேண்டும், அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மனிதன் விடுதலைப்பெற அதே மனிதமான உருப்பெற்று எங்களை மீட்கவந்த இறைவா, எல்லோருக்கும் உமது மனநிலையை தரவேண்டும், மனிதம் மட்டுமல்ல இயற்கையையும் நேசித்து பாதுகாக்கும் நீர், இன்று உமது பிறப்பு விழாவினை கொண்டாட தயாராகும் நாங்கள் அனைவரும் உம் குழந்தை உள்ளம் எங்களிலும் குடிகொள்ள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. முதன்மையானவரே இறைவா, புனித லூசியா எனும் பிரகாசியம்மாளைப்போல் உலகிலுள்ள அனைத்து மனிதர்களும் இறைப்பற்றுடன் உமது ஒளியிலும் வழியிலும் பயணித்து எல்லோரும் இறை ஒளியாக, வழியாக மாறி தொடர்ப்பணி பயணம் மேற்கொள்ள நிறைவாக ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 17.12.2023 திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எசா. 61: 1-2,10-11 II. 1தெச. 5:16-24 யோவா. 1: 6-8, 19-28

திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு மகிழ்ச்சியின் ஞாயிறு என்று சொல்லப்படுகிறது. எனவேதான் இன்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக ரோஸ்நிற மெழுகுவர்த்தி (Candle of Joy) ஏற்றப்படுகிறது. புனித

வாழ்விற்கு நம்மை அழைக்கும் ஞாயிறு இது, அறநெறிக்கான செயல்களை முன்னெடுக்கத் தூண்டும் ஞாயிறும் இதுவே, நீதி நேர்மை வழிகளில் நம்மை பயனிக்க அழைத்துச் செல்லும் ஞாயிறும் இதுவே. ஆண்டவரை யார் பற்றிக் கொண்டு இருக்கிறார்களோ அவர்கள் வாழ்வில் எவ்வளவு துன்பங்கள், வேதனைகள், சோதனைகள் ஏற்பட்டாலும் அவற்றைக் கண்டு கலங்குவதில்லை. மாறாக, "என்னைக் காப்பவர் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை" என்ற உணர்வோடு மகிழ்ச்சியில் இருப்பவர், என முதல் வாசகத்தில் எசாயா மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம் சொல்கிறார். தூய பவுல் "எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள், எல்லா வேளைகளிலும் ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்" (பிலி. 4:4) என்கிறார். நம்மையே நாம் ஏற்றுக்கொள்ளுதலும், நம்முடைய மகிழ்ச்சியின் அடுத்த காரணம் தன்னை ஏற்றுக்கொள்ளும் மனிதன் உண்மையான மகிழ்ச்சியை பெறுகிறான் என்ற உண்மையை இன்றைய நற்செய்தி வழியாக புனித யோவான் வெளிப்படுத்துகிறார்.

லேவியரும், குருக்களும், "நீர் மெசியாவா? அல்லது எலியாவா? இறைவாக்கினர்களில் ஒருவரா?" என்று திருமுழுக்கு யோவானிடம் கேட்டபோது, தான் இறைவனது வழியை ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்ட சாதாரண பணியாள் என்று தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு தன்னைப்பற்றி பேசுகிறார், தன்னை முழுமையாக ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே, அவர் உண்மைக்காகவும், நீதிக்காகவும், இயேசுவுக்கு சாட்சியாகவும் தன் உயிரையும் இழக்கத் துணிந்தார். இறைவனின் படைப்பில் எல்லோரும் சமமாக படைக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் நம்மை நிறை குறைகளோடு அன்பு செய்கிறார் என்பதை உணர்ந்து, இறைவனுக்கு நன்றி கூறும் நற்பண்பை வளர்த்துக்கொண்டு, திருமுழுக்கு யோவானைப்போல உண்மைக்கும் இயேசுவிற்கும் சான்று பகர்பவர்களாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல் நலமும், ஆன்ம நலமும் தந்து, இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில், உறுதியோடும், உற்சாகத்தோடும் பணிபுரிந்திட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நிலைவாழ்வளிக்கும் எம் தந்தையே, நாங்கள் எங்களின் துன்ப துயர நேரங்களில் உண்மையான விடுதலையும், மகிழ்ச்சியும் உம்மிடம் மட்டுமே உள்ளது என்பதை உணர்ந்து உம்மைப்பற்றிக் கொண்டு வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒளியாம் இறைவா, இறைமகன் வருகைக்காக காத்திருக்கும் நாங்கள் எங்கள் உள்ளங்கள் தாழ்ச்சி உள்ளதாகவும், நம்பிக்கையுள்ளதாகவும், செபத்தோடு கூடிய பிறர்பணி செய்வதிலும் எங்களை தயாரித்து

இருளகற்றி ஒளியேற்ற போகும் இறைமகன் இயேசுவை எங்கள் உள்ளத்தில் ஏற்று வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் தந்தையே இறைவா, திருமுழுக்கு யோவானைப்போல நாங்களும் உள்ளதை உள்ளவாறு ஏற்றுக்கொள்ளவும், எங்களின் திறமைகளை பிறர் நன்மைக்காகப் பயன்படுத்தவும், தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடும், இறைவனின்மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர்களாக நாங்கள் வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.12.2023 கான்டி நகர் புனித ஜான் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

கான்டி நகர் புனித ஜானின் திருநாளை சிறப்பிக்க இன்று நம் திருஅவை நம்மை அழைக்கிறது. புனித ஜான் 1390ல் ஜூன் மாதத்தில் போலந்திலுள்ள கேட்டி என்னும் ஊரில் பிறந்தவர். இவரது பெற்றோர் ஸ்டானிலிஸ்லா காண்டி அணாகான்டி என்பவர்களாவார்கள். சிறுவயது படிப்பு முடிந்தவுடன். விவிலிய கல்வியிலும், இறையியல் கல்வியும் நன்று பயின்றார் கிராக்கோ பல்கலைக் கழகத்தில் பயின்றவர். இவர் பிரான்சிஸ்கன் சபையை சார்ந்தவர். சிராக்கோ கல்வி நிலையம் "ஜாஜிலோனியன்" பல்கலைக் கழகமாக பெயர் பெற்றது. அப்பல்கலைக்கழகத்தில் இறக்கும்வரை பேராசிரியராக பணியாற்றினார். தன்னுடைய நேரங்களை புனித நூல்களை பதிவு செய்வதிலும், இறையியலாக்கம் புரிவதிலேயே செலவழித்தார். ஏழைகளுக்காகவும், ஏழை மாணவர்களின் தேவைகளுக்காகவும் மிகவும் பாடுபட்டார். தனது இறையியல் தேடல்களுக்கு அப்பால் "கலிலியன்", "நியூட்டன்" விதிகளுக்கு காரணமான "ஜீன் பரிடியன் தியரி" இவைகளுக்கு உதவியாக பல ஆராய்ச்சிகளை செய்தார்.

இறையியல் தேடலில் முனைவர் பட்டங்கள் பெற்றார். பின் தன் நகரத்தில் "ஏழைகளின்மீது இரக்கம் காட்டுபவர்" என புகழ்பெற்றார். ஒருமுறை எருசலேம் நகருக்கும், மூன்றுமுறை ரோம் நகருக்கும் புனித பயணங்கள் மேற்கொண்டார். தனது கல்விநிறுவனத்திலேயே 1473ல் டிசம்பர் 24ம் நாள் தனது 83வயதில் இறைவனடி சேர்ந்தார். ஆயராக அல்லாமல் ஒரு அருட்பணியாளராக இருந்து புனிதராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் நம் புனிதர் ஜான் கான்டி. இவர் 28.3.1676ல் திருத்தந்தை 10ம் கிளமெண்ட் அவர்களால் முத்திப்பேறு பட்டம் கிடைக்கப்பெற்று பின் 16.7.1767ல் திருத்தந்தை 13ம் கிளமெண்ட் புனிதர் பட்டம் வழங்கினார். போலந்து நாட்டின் பாதுகாவலராக 1737ல் திருத்தந்தை 12ம் கிளமெண்டால் அறிவிக்கப்பட்டார். அவரது பெயரால் வடஅமெரிக்காவில் பல மாநிலங்களில் கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. ஞானம் நிறையப் பெற்ற புனிதர் ஜான் கான்டியைப்போல நாமும் தூய ஆவியாரால் ஞானம் பெற இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வாழ்வின் வழிகாட்டியே இறைவா, எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், துறவறத்தார், திருநிலையினர் யாவரும் நற்செய்தியின் வழிகாட்டலில் வாழவும், மதிப்பீடுகளை பகிர்ந்தளிக்கவும், ஆயர் மாமன்றம், செயல்பாடுகள், அனைத்தும் உமது வல்லமையால் வெற்றிகரமாக செயல்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, அகில உலக மக்கள் அனைவரும் உம்மை புரிந்துக்கொண்டு, வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், இறைஞானத்தையும் பெறவும், மூவொரு இறைவனாகிய தந்தையோடும், தூய ஆவியாரோடும் உம்மை என்றென்றும் வாழ்த்திப்போற்றும் தன்னம்பிக்கையை அளித்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பவரே எம் இறைவா, இவ்வுலகில் வாழும் அநாதைகள், பெற்றோர்கள், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நோயினாலும், கடன் பிரச்சனையாலும், பலவிதமான தொந்தரவுகளாலும் தவிப்போருக்கு நீரே நல்வழிக்காட்டியாக இருந்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 24.12.2023 திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

2சாமு. 7: 1-5,8-12,16 உரோ. 16: 25-27 லூக். 1: 26-38

அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் அன்பின் வெளிப்பாடாய் வந்திருக்கும் திருஅவையின் நம்பிக்கையாளர்களே, இன்றைய திருப்பலியில் இறைமகனின் பிறப்பை எதிர்நோக்கி அன்பின் மெழுகுத்திரியில் ஒளியேற்றுகிறோம். அன்பின் மெழுகுத்திரி அன்னை மரியாவையும் அவர் கணவர் புனித யோசேப்பையும் குறிக்கின்றது. மீட்பரை சந்திக்க அவர்களைப் போல் நம்மை மீட்க வந்த பாலன் இயேசுவை வரவேற்க நம்மை இத்திருப்பலி வழியாக தயார்ப்படுத்துவோம். இன்றைய முதல் வாசகத்தில் தாவீது அரசர் அரசர்க்கெல்லாம் அரசர் ஆண்டவருக்கு கோயில் கட்ட விரும்புகிறார். மன்னர் தாவீதின் வீட்டைத்தானே கட்டியெழுப்பப் போவதாக இறைவனே வாக்களிக்கிறார். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் பலவிதமான துன்பங்கள், கவலைகள் மத்தியில் கிறிஸ்தவர்கள் இறைநம்பிக்கையில் திடப்படுத்துவதற்காக இதனை எழுதுகிறார். இன்றைய நற்செய்தியில் கலிலேயாவில் உள்ள நாசரேத்து என்ற கிராமத்திற்கு கன்னிமரியாவிடம் இறைவன் வானத்தூதரை அனுப்புகிறார். வானதூதர் அவரைப்பார்த்து இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர், அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர் என்கிறார்.

ஆண்டவரின் அழைத்தலை மிகுந்த தாழ்ச்சியுடன் அன்னை மரியா ஏற்றுக்கொள்கிறார். பல தடைகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை கடவுள் மனித மீட்பு எனும் மாபெரும் பணிக்குத் தன்னை தேடுகிறார் என்பதை உணர்ந்து கன்னிமரி வீரமுடன் தன்னைக் கொடுக்க முன்வருகின்றார். நன்மையை நிலைநாட்ட துணிந்துவிட்டால் உலகம் நம்மை நோக்கி என்ன சொல்லும் எனும் கவலையை விட்டுவிட்டு கடவுளின்மீது முழு நம்பிக்கையுடன் நம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்பதை அன்னை மரியா நமக்கு எடுத்துக்காட்டுவதை நமது வாழ்வில் பின்பற்ற வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் இறைவா, அன்னை மரியா மனிதகுல மீட்புக்காக தன்னை அர்ப்பணித்ததுபோல, மனித இனத்தை அன்பு செய்ததுபோல எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உம்மந்தைகளை அன்பு செய்து வாழும் இவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தாழ்ச்சியின் இறைவா, நாங்கள் அனைவரும் எங்களிடமுள்ள சுயநலத்தையும், பேராசையும் துறந்து பொதுநலத்தோடும், தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடும் எங்கள் பங்கின் வளர்ச்சிக்காக உழைக்கும் அனைத்து நல்லுங்களையும் ஆசீர்வதிக்கவும் உம் தூய ஆவியாரின் துணையை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உன்னைப் படைத்தவரை உன் இளமையில் நினை என்று சொன்ன எம் அன்புத் தந்தையே இறைவா, இளைஞர்கள், இளம்பெண்கள் நற்செயல்கள் புரியும் ஆற்றல், கிறிஸ்துவின் அன்பை பிறரில் கண்டு மகிழும் உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, முதியோர்கள், அனாதைகள், கைவிடப்பட்டோர், குழந்தைகள் ஆகிய அனைவருக்கும் தேவையான பாதுகாப்பும், உடல்உள்ள நலமளித்து இறைமகன் இயேசுவின் அன்பில் மகிழ்ந்து வாழும் மனதினை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.12.2023 கிறிஸ்து பிறப்பு விழா (காலை) திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா. 9: 2-4,6-7 II. 1தீத். 2: 11-14 லூக். 2: 1-14

இயேசு கிறிஸ்துவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, கடவுள் நம்மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் விழாதான் கிறிஸ்து பிறப்பு பெருவிழா. கடவுள் தன்மையில் விளங்கிய அவர், அந்நிலையை விட்டு இறங்கிவந்து நம் நிலைக்குத் தாழ்ந்து நம்மோடு தன்னையே இணைத்துக்கொண்டார். "கடவுள் நம்மோடு"

என்ற உணர்வு நமக்கு உரிமைச் சொத்தாகிறது. யோவான் 1:11ல் அவர் தமக்குரியவர்களிடம் வந்தார், அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. யோவான் 1:12ல் நம் அனைவருக்குமானது, "அவரிடம் நம்பிக்கைக் கொண்டு அவரை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் அவர் கடவுளின் மக்களாகும் உரிமையை அளித்தார்". இயேசுவை நம்பும் எளிய மக்களுக்கு கிடைத்த உரிமை வாழ்வு கடவுளின் இரக்கத்தைக் காட்டுகிறது.

இயேசு கிறிஸ்து ஏழையாக மாட்டுத் தொழுவத்தில் பிறந்த செய்தி முதன் முதலாக இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இயேசு தமது பிறப்பிலும், பணிவாழ்விலும் ஏழை எளியவர், பாவிகள், ஒடுக்கப் பட்டவர்களின் அன்பராகவும், தோழராகவும் இருந்துள்ளார். இதையே நம் வாழ்விலும் பின்பற்றும்படி தமது வார்த்தையாலும், போதனையாலும் எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் நாம் உலகின் கண்ணோட்டத்திற்கேற்ப ஆண்டவரை ஆடம்பரத்திலும், பகட்டிலும், சிம்மாசனத்திலும் வைத்துப் பார்க்க விரும்புகிறோம். சாமானியர்களிடம், உழைக்கும் மக்களின் வேர்வையிலும் விடுதலைக்காண போராட்டத்திலும் இயேசுவைக் காணத் தவறிவிடுகிறோம். இயேசுவை இத்தகைய ஏழை எளிய மக்களிடத்தில் காண முயற்சியெடுப்போம். எளிய மனத்தோராய் அவரை நமது இல்லத்திலும் உள்ளத்திலும் வரவேற்போம். வரவேற்று பிறரை வாழ வைப்பவர்களாக போராளியாம் இயேசு பாலனின் ஆசீரைப் பெற்று வாழ்ந்திட இப்பெருவிழாத் திருப்பலியில் அர்த்தமுடன் பக்தியாகப் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. காரிருளை நீக்கி பேரொளியாக வந்த அன்பு தெய்வமே, உமது திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தாங்கள் ஏற்றுக்கொண்ட திருப்பணியை ஆர்வமுடன் செயல்படுத்த வேண்டிய ஆற்றலையும், வல்லமையையும் இவர்களுக்கு அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வியத்தகு ஆலோசகரே எம் இறைவா, நீர் உமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, ஞானத்திலும், இறைபக்தியிலும், நம்பிக்கையிலும் சிறந்து விளங்கியதுபோல எங்கள் பிள்ளைகளையும், ஆசீர்வதித்து உமக்கேற்ற ஞானமுள்ள பிள்ளைகளாக வளர அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே, இன்று குடும்பங்கள் பல்வேறு முரண்பட்ட சூழ்நிலைகளால் சுயநலம் கொண்டவர்களாக கணவன் மனைவி, பிள்ளைகள் பெற்றோர், உறவினை சரிவரப் புரிந்துக் கொள்ளாமல் வாழும் நிலையை மாற்றி அன்பும், ஒற்றுமையும், சமாதானமும் விட்டுக்கொடுக்கும் மனமும் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. சமாதானத்தின் தூதுவரே எம் இறைவா, இன்று உலகம் போரின் அபாயத்தைச் சந்திக்கும் வேளையில் தங்களின் இயல்பு நிலை மாறி துன்புறும் மக்களை உம்பதம் படைக்கின்றோம். சண்டையை ஏற்படுத்துகின்றவர்கள் பகைமை உணர்வை மறந்து ஒற்றுமையோடும், சமாதானத்தோடும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 27.12.2023 புனித யோவான் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

இறையேசுவின் அன்புப் பிள்ளைகளே, இன்று புனித யோவானின் திருவிழா திருப்பலியைச் சிறப்பிக்கின்றோம். இவர் செபதேயுவின் மகன் இடியின் மகன் என்று அழைக்கப்பட்டவர், இவர் திருமுழுக்கு யோவானின் சீடர், பின் இயேசுவின் சீடரானார். இயேசுவோடு மிகவும் நெருக்கமாக இருந்து, இயேசுவின் அன்பைப் பெற்று வாழ்ந்தவர். இறுதி இராவுணவின்போது மற்றத் திருத்தூதர்கள் அனைவரும் பயந்து ஒடி ஒளிந்துக்கொண்டபோதும் இவர் தைரியமாகவும், இயேசுவின்மீதுள்ள அளவுகடந்த அன்பினாலும், இயேசு சிலுவையில் இறக்கும்வரை அவருடன் பயணித்தவர். சிலுவையடியில் நின்ற இவரிடம் இயேசு தம் அன்பு அன்னையைப் பார்த்து, இன்றுமுதல் இவரே உம் அன்னை என்று ஒப்படைத்துவிட்டு உயிர் துறந்தார். இயேசு அடக்கம் செய்த கல்லறைக்கு பேதுருவுடன் சென்று கல்லறையை பார்த்தபோது வெறுமையாக இருப்பதைக் கண்டு இயேசு தாம் சொன்னபடி உயிர்த்து விட்டார் என்று இயேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கைக் கொண்டார்.

இயேசுவே இறைமகனாகிய மெசியா என்று உலக மக்கள் நம்புவதற்காகவும், நம்மில் அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவும் கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்தி கிறிஸ்துவ வாழ்வை வலுப்படுத்துவதுதான் அவர் எழுதிய நற்செய்தியின் நோக்கம். புனித யோவான் ஆண்டவர் தாபோர் மலையில் உருமாறினதையும், பூங்காவனத்தில் மரண வேதனைப்பட்டதையும் கண்டவர். இவரை "தொமீசியன் பேரரசு பிடித்து உரோமைக்கு கொண்டு சென்றார்கள். அங்கே இவரை கொதிக்கும் எண்ணெய் கொப்பறையில் போட்டார்கள். அதிலிருந்து எந்த ஒரு சிறு காயமுமின்றி இறைவனருளால் காப்பாற்றப்பட்டு, இறையசைப் பற்றிய நற்செய்தியை உலகமெங்கும் பறைசாற்றினார். இவர் எபேசு நகரில் நூறாம் ஆண்டில் இறந்தார். இவரது கல்லறைமீது அழகிய ஆலயம் கட்டப்பட்டது. இப்புனிதரின் விழாவில் பங்கெடுத்து செபிக்கும் நாமனைவரும் இறைவனின்மீது நம்பிக்கைக் கொண்டு வாழ இத்திருப்பலியில் பக்தியோடு செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே, உம் திருஅவையின் திருப்பணியாளர்களான, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினருக்கு உறுதுணையாக இருந்து

சிதறிப்போகும் கத்தோலிக்க மக்களை உம் பாதையில் வழிநடத்த தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வும் வழியுமான இறைவா, புனித யோவானைப்போல வாழ்ந்து, கிறிஸ்துவின் அன்பை அதிகமாகப் பெற்று நம்பிக்கை வாழ்வில் நிலைத்து நின்று கிறிஸ்துவில் ஆழமான நம்பிக்கைக் கொண்டு எங்கள் வாழ்வை இறைவனில் அர்ப்பணித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமுள்ள தந்தையே, நாட்டையாளும் தலைவர்கள் மதத்தின் அடிப்படையில் மக்களை வேறுபடுத்தாமல் ஏழ்மை, கல்வி இவைகளை முன்னிலைப்படுத்தி மக்களை ஆட்சிசெய்து, அனைவரையும் அரவணைத்து வாழவும், அவர்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட வேண்டிய நல்ல ஞானத்தையும் தாராள உள்ளத்தையும் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.12.2023 புனித மாசில்லாக் குழந்தைகள் தினவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, நமது தாயாம் திருஅவை இன்றைய நாளில் மாசில்லாக் குழந்தைகள் தினத்தை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. விண்ணக தேவன் மண்ணகத்தில் உள்ள மாந்தரை மீட்க மாமரி சூசையின் மகனாய் பிறந்தார். மீட்பர் பிறந்த நற்செய்தி அறிந்த மூன்று ஞானிகள் அவரைக் காண பெத்லகேம் வந்தனர். வரும் வழியில் ஏரோது அரசரைச் சந்தித்து, "இஸ்ரயேல் மக்களை ஆளப்போகும் யூதர்களுடைய அரசர் எங்கே பிறந்திருக்கிறார்" என்று கேட்டனர். இதனால் கலக்கமுற்ற ஏரோது ஞானிகள் குழந்தையைக் கண்டு வணங்கியப் பின் தன்னிடம் கூறும்படிக் கேட்டுக்கொண்டார். இயேசு பாலனைக் கண்ட ஞானிகள் தம்மிடம் திரும்பி வரவில்லை என்பதை அறிந்து கோபத்தினால் பெத்லகேமிலும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளை கொல்ல ஏரோது மன்னன் ஆணையிட்டான். வானதூதர் யோசேப்புக்கு கனவின்மூலம் எச்சரித்து அவர் குடும்பத்துடன் எகிப்துக்கு தப்பிச் சென்றனர். அன்றைய நாளில் அங்கிருந்த குழந்தைகள் கொல்லப்பட்டன. அவ்வாறு இறந்த குழந்தைகளின் நினைவாக திருஅவை அவர்களை மறைசாட்சிகளாக மதித்து இவ்விழாவினைக் சிறப்பிக்கின்றது.

அன்பு பெற்றோர்களே, இன்றும் அதிகார வெறிகளுக்கு பலியாகிக்கொண்டிருக்கும் மாசற்ற குழந்தைகள் இன்றைக்கும் பெற்றோர்களால் நிறைவேற்ற முடியாத ஆசைகளை தங்களின் குழந்தைகளிடத்தில் திணிக்கின்றனர். தன்னை பாதுகாக்க தன் ஆட்சியை பெறுமையை தக்கவைக்க அப்பாவி குழந்தைகளைக் கொன்றான் அன்று.

இன்று தங்கள் இன்பத்துக்காக எத்தனை குழந்தைகள் கருவிலேயேயும், பிறந்தவுடன் உயிரோடு புதைக்கின்றனர். இவ்வாறு குழந்தைகளின் வாழ்வு கேள்விக்குறியாக மாறிக்கொண்டு வருகின்றன. மாசற்ற குழந்தைகள் பெருவிழாவினைக் கொண்டாடும் இந்நாளில் கல்லம் கபடமற்ற உள்ளம் கொண்ட நமது குழந்தைகளுக்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம். இறைவன் நமக்களித்த பெரும் கொடையான இக்குழந்தைகளை அறிவிலும், ஞானத்திலும், இறைபக்தியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக வளர்த்து இறைவனுக்கு சாட்சியுள்ள பிள்ளைகளாய் வளர்க்க, வாழ இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தூண்களாக விளங்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை உமக்கேற்ற பாதையில் வழிநடத்த அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்ற எம் இறைவா, அன்பின் அடையாளமாய் நீர் எங்களுக்கு கொடுத்திருக்கும் பெருங்கொடையான குழந்தைச் செல்வங்களை நாங்கள் உமது இறையரசின் வாழ்க்கைக்கேற்ற விதத்தில் ஞானத்திலும், அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக வளர்க்க எங்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மருத்துவரின் துணையாளராக விளங்கும் எம் அன்பு இறைவா, பலவிதமான நோயினாலும், துன்பங்களாலும் வருந்தும் உம் மக்களைக் கண்ணோக்கும். அவர்களின் குற்றங்குறைகளை மன்னித்து நோயினின்று விடுவித்து புதுவாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.12.2023 திருக்குடும்ப பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

I. தொநூ. 15: 1-6,21:1-3 II. எபி 11: 8,11-12,17-19 லூக். 2: 22-40

குடும்பம் ஒரு கோவில், நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பார்கள். கடவுள் நம்மை பாதுகாத்து பராமரிக்க நமக்காக கொடுத்த குடும்பம் திருக்குடும்பம். அத்தகைய உன்னதமான, உலகமே போற்றக்கூடிய திருக்குடும்ப திருவிழாவை சிறப்பிக்க நாம் அனைவரும் ஒன்று கூடியுள்ளோம். தெய்வபயத்தை திடமாகக் கொண்டு ஆண்டவரின் அடிமை என்று அன்னை மரியாளும், இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மரியாளை ஏற்றுக்கொண்ட யோசேப்புபோல தெய்வ பயம் நிறைந்த குடும்பமாகவும், ஆலயம் சென்று இறைவழிபாட்டில் பங்கேற்று ஆன்மீக

வாழ்வில் அக்கறைக்கொண்டு வாழவும், இறைவார்த்தையை போதிக்க இயேசுவை காணிக்கையாக அர்ப்பணித்ததுபோல அர்ப்பண வாழ்வும் நீதிமானாகிய யோசேப்புப்போல் நேர்மையாளராகவும், மரியாளைப்போன்று ஓடோடி சென்று உதவி செய்யும் மனப்பான்மைக் கொண்ட குடும்பங்களாக நமது குடும்பமும் விளங்க முயற்சி செய்வோம்.

இன்றைய வாசகங்களும் பிள்ளைகளுக்கு பெற்றோர்மீதுள்ள கடமைகளையும், அன்னையால் செல்வமும் தந்தையால் மகிழ்ச்சியும் பெற்றோரை மதிக்கும்போது கிடைக்கும் என்று கூறுகிறது. பெற்றோரின் நடத்தை பிள்ளைகளின் பாடப்புத்தகம் என்பார்கள். குடும்ப வாழ்விலே அன்பும் மன்னிப்பும் தலைசிறந்தது அதில் கணவன் மனைவி எவ்வாறு வாழவேண்டும் என்பதையும் இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துக்காட்டுக்கின்றன. அன்னை மரியாளை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் யோசேப்பு விலக்கிவிட நினைத்தார். ஆனால் வானதூதரின் அறிவுரைப்படி மீண்டும் ஏற்றுக் கொண்டார். இது கடவுளின் திருவுளப்படி நடக்கிறது என்று நினைத்தார். பல துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்த பச்சிளம் குழந்தையை தூக்கிக்கொண்டு எகிப்துக்கு தப்பிச்செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தது. கடவுளிடமிருந்து செய்தி வந்தபின் அந்தப் பனியிலும் குளிரிலும் பயணம் செய்து ஒருவர் ஒருவரை குறைகூறாமல் கடவுளை முழுமனதாக ஏற்றுக்கொண்ட பண்பை நாமும் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு நம்முடைய குடும்பங்களும் திருக்குடும்பமாக மாற வேண்டுமென்றால் இறைத்திட்டத்தை அறிந்து அதன்படி செயல்பட நம் குடும்பங்களை இறைவனிடம் ஒப்படைப்போம். பிரச்சனைகள் வரும்போது கடவுளை மையமாக வைத்து நம் வாழ்வை இறைவனில் பயணிக்க நம்மை நாம் தயார்ப்படுத்திக்கொண்டு வாழ இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, திருஅவையின் தலைவர்களாக வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் தங்களின் அழைப்பினை ஏற்று, வாழ்வில் ஏற்படும் சோதனைகளை உமது வல்லமையால் முறியத்து வெற்றிக்கொள்ளும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிகாட்டும் வள்ளலே எம் இறைவா, உலகமெங்கும் அமைதி நிலவ வேண்டுமென்றும் மக்கள் நோயின்றி நலமோடும் வளமோடும் உமக்கேற்ற திருக்குடும்பமாக ஒற்றுமை, சமாதானம், விட்டுக் கொடுக்கும் மனமும் எங்களிடையே ஒளிர வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஆலோசனையின் தெய்வமே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் சுயநலம் கருதாமல், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியினை பாகுபாடு பாராமல் நீதியோடும், நேர்மையோடும் மக்களின் பணியினை செய்ய

அவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. பாவிகளிடையே வாழும் அன்பு தெய்வமே, பலவிதமான தீயச் செயல்களையும், கொலை, கொள்ளை போன்ற பலவிதமான பாவச் செயல்களை உமக்கெதிராக செய்கின்றவர்களை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். தாங்கள் செய்வது என்னதென்பதை அறிந்தும் அறியாதவர்கள்போல் செயல்படுகின்றனர். இவர்களின் மனதை மாற்றி உம்மிலே ஒன்றுசேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அன்பின் பிதாவே உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புதுவருட இரவு ஆராதனை

திரு. பி. விக்டர்

இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, தூய ஆவியாரின் துணையோடு இந்த இரவில் பிறக்க இருக்கின்ற இப்புத்தாண்டை சிறு ஆராதனையோடுத் தொடங்குவோம்.

**தொடக்கப் பாடல் : தூய ஆவி பாடல்**

இன்று நாம் நடந்து முடிந்துள்ள 2023ம் ஆண்டின் இறுதி நாளில், இந்தாண்டு முழுவதும் நம்மை வழிநடத்திய நம் ஆண்டவருக்குப் புகழ்ச்சி பண் இசைத்து, நன்றி கூறி வரவிருக்கும் 2024 புதிய ஆண்டை வரவேற்க இங்கு குழுமியுள்ளோம். 2023ம் ஆண்டு ஜனவரி முதல் நாளை நினைத்துப் பார்ப்போம். கொரோனாவின் கொடுமுடியில் சிக்கி, அநேக உயிர்களை பலிகொடுத்து, புதிய ஆண்டிலும் இது தொடருமா என்கிற கேள்விக்குறியோடும், அச்சத்தோடும், நடுக்கத்தோடும் தொடங்கினோம். நடந்து முடிந்த 2023ம் ஆண்டில் அநேக உறவுகளை இழந்திருக்கிறோம், இப்புதிய 2024ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம். "அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன், கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன், உதவி செய்வேன், என் நீதியின் வலது கரத்தால் உன்னைத் தாங்குவேன்" (எசா.41:10) என்கிற கடவுளின் வார்த்தைகள் நமக்கு நம்பிக்கையூட்டியது. ஆண்டவராகிய கடவுள் நம்மோடு இருக்கிறார், அவர் நம்மைப் பாதுகாத்து வழிநடத்துவார், நாமும் வாழ்வோம் என்கிற நம்பிக்கை நமக்குள் வந்தது. இந்த நம்பிக்கையில்தான் 2023ம் ஆண்டைத் தொடங்கி, அதை நிறைவும் செய்துள்ளோம். அதற்காக மனம் நிறைந்த நன்றியுணர்வுடனும், மகிழ்வுடனும் நமக்கு நன்மைகள் செய்த ஆண்டவருக்குப் புகழ்பாடி அவரை மாட்சிப்படுத்துவோம்.

**பின்வரும் ஒவ்வொரு புகழ்ச்சிக்குப் பிறகு "உம்மைப் போற்றுகிறோம், புகழ்கிறோம், ஆராதிக்கிறோம்" என்று கூறவும்.**

- விண்ணகத்தில் வாழும் மாட்சிமிகு தந்தையே இறைவா
- எம்மைப் பாவத்திலிருந்து விடுவித்து புதுவாழ்வளித்த உலக மீட்பராம் இயேசுவே இறைவா
- ஒவ்வொரு நாளும் எம்மை வலுப்படுத்தி, துணையாயிருக்கும் தூய ஆவியே இறைவா
- உலகையாளும் முழுமுதற் கடவுளாம் மூவொரு இறைவா
- கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என முக்காலத்திலும் வாழும் உயிருள்ள இறைவா
- தூய ஆவியார் வழியாக உமது அன்பை எம்மீது பொழிபவரே
- "அஞ்சாதே" என்று சொல்லி எம்மைப் பெயர் சொல்லி அழைத்தவரே
- சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகச் செய்கிறவரே
- இருள்சூழ் பள்ளத்தாக்கில் பயணித்தாலும் உடனிருந்து காப்பவரே

**பொருத்தமான ஆராதனைப் பாடல்களைப் பாடவும் :** ஆராதிப்பேன் நான்....

**பாவமன்னிப்பு வழிபாடு**

ஆண்டவராகிய கடவுள், நம் குற்றங்களை, தவறுகளை, மன்னித்து விடுகிறார். எனவே நமது பாவங்களை நினைத்து மனம் வருந்தி அதை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு விட்டுவிடும்போது அவர் நம்மீது மனமிரங்கி மன்னிக்கிறவராய் இருக்கிறார் (நீமொ. 28:13). கடவுளிடமிருந்து மன்னிப்பைப் பெறுகிறவர்களாகிய நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்பதற்காகவே "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத்6:12) என்று சொல்கின்றோம். இதன்மூலம் நாம் நமக்கு எதிரானவர்களின் குற்றங்களை மன்னித்தால்தான் நம்முடைய குற்றங்களும் மன்னிக்கப்படும் என்பதைத் தெளிவாக்கியுள்ளார். அதுமட்டுமல்லாமல், நாம் பிறருடைய குற்றங்களை மன்னியாவிட்டால், நமது மன்னிக்கப்பட்ட குற்றங்களும், பாவங்களும் மறுபடியும் தோண்டி எடுக்கப்படும் என்பதையும் நமக்கு விளக்கியுள்ளார் (மத்.18: 32-33). எனவே நமது வாழ்வில் யாரையாவது இன்றுவரை மன்னியாது இருக்கிறோமென்றால், இவ்வேளையில் அவர்களை மன்னித்து இறைவனின் இரக்கத்தை மன்றாடுவோம். "தூய உள்ளத்துடன் ஆண்டவர் முன் நிற்க வேண்டும்" (திபா. 96:9), என்று நமக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கடவுளுக்குரிய தூய்மை, பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய இயல்புகளை அணிந்துக்கொண்டவர்களாய் (கொலோ.3:12) 2024ம் ஆண்டை வரவேற்க ஆயத்தமாவோம். ஆண்டவராகிய இறைவன் நம்மைவிட்டு விலகாதவராக நம்மை ஒருபோதும் கைவிடாதவராக வரவிருக்கும் 2024ம் ஆண்டு முழுவதும் நம்மை நடத்துவராக (யோவா.1:9)

**ஒவ்வொரு மன்னிப்பு மன்றாட்டுக்குப் பிறகும் "இரக்கம் மிகுந்த இறைவா, எங்களை மன்னிப்பீராக" என்று சொல்லவும்.**

- எங்களை நாங்கள் அன்பு செய்வதுபோல பிறரை அன்பு செய்ய மறந்த நேரங்களுக்காக
- ஆண்டவரே, எம்மீது நீர் காட்டிய உமது அன்பைப் புரிந்துக்கொள்ளாத வேளைகளுக்காக
- வாழ்வளிக்கும் வார்த்தையாம் உமது வார்த்தைகளைப் புறக்கணித்ததற்காக
- உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள் என்ற உமது வார்த்தையை கடைப்பிடிக்காததற்காக
- நானே வழி என்றுரைத்த ஆண்டவரே உமது உண்மை வழியில் நடக்காத குற்றங்களுக்காக
- உமது மன்னிப்பைப் பெற்ற நாங்கள் பிறரை மன்னியாத தவறுக்காக
- பொய் சொல்லாதே என நீர் கட்டளையிட்டிருந்தும் அதுப்பற்றிய சிந்தனையின்றி "பொய்" சொன்ன குற்றத்திற்காக

**பாடல்: பொருத்தமான பாவமன்னிப்பு பாடல் பாடவும்** (எம் பிழையெல்லாம் பொறுத்தருளும்.....)

## நன்றி அறிவிப்பு வழிபாடு

"நன்றி மறப்பது நன்றன்று என்கிற உலக வழக்கிற்கிணங்க ஆண்டவராகிய கடவுள் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறுவோம். ஆண்டவரும் நம்மிடம் நன்றிளை எதிர்நோக்கியவராக இருக்கிறார். ஒருமுறை இயேசு தம் சீடர்களோடு எருசலேம் நகருக்குச் செல்லும் வழியில் பத்து தொழுநோயாளர்கள் அவரை எதிர்கொண்டு வந்து "ஐயா, இயேசுவே, எங்களுக்கு இரங்கும்" என்று வேண்டினர். இயேசு அவர்களிடம், "போய் உங்களை குருக்களிடம் காண்பியுங்கள்" என்று சொல்லி அனுப்பினார். அவர்கள் அவ்வாறே செல்லும் வழியில் தாங்கள் குணமடைந்ததைக் கண்டனர். அவர்களில் ஒருவர் மட்டும் திரும்பி வந்து தான் குணமடைந்ததற்காக இயேசுவுக்கு நன்றி கூறினார். இயேசுவோ அவரிடம், பத்துபேரும் சுகமாகவில்லையா? மற்ற ஒன்பதுபேரும் எங்கே? என்று வினவினர் (லூக்.17:17). இந்த நிகழ்விலிருந்து நாம் பெற்ற நன்மைகளுக்கு நன்றி சொல்ல வேண்டுமென கடவுளும் எதிர்பார்க்கிறவராக இருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஆம், கடவுள் நம் வாழ்வில் செய்த அனைத்து செயல்களுக்காகவும் அவருக்கு நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம். நமது வாழ்வில் எது நடந்தாலும் உயர்வோ, தாழ்வோ, வாழ்வோ, சாவோ, லாபமோ, நஷ்டமோ, துன்பமோ, துயரமோ எது நடந்தாலும் நன்றி கூறி மகிழ்வோம்.

**ஒவ்வொரு நன்றி அறிவிப்புக்குப் பிறகும் "ஆண்டவரே மனமகிழ்வோடு உமக்கு நன்றி கூறுகிறோம்" என்று சொல்லவும்.**

- எமக்காக இரத்தம் சிந்தி, மரித்து, எமது பாவங்களிலிருந்து எம்மை மீட்டு வாழ்வளித்ததற்காக
- நீர் எமக்குத் தரவிருக்கின்ற மகிழ்ச்சி நிறைந்த 2024ம் ஆண்டினை மீண்டுமாய் எங்களுக்கு கொடையாக அளித்திருப்பதற்காக
- எம்மோடிருக்கிறவரே, எம்மை வாழவைப்பவரே, எமக்கு நன்மைகள் அளித்து, உமது பாதையில், அன்பில், அரவணைப்பில், பாதுகாத்து வழிநடத்திய உம் அளப்பறிய கொடைக்காக

**பொருத்தமான நன்றிப் பாடல்களைப் பாடவும்** (இதுவரை செய்த செயல்களுக்காக....)

**விண்ணப்ப வழிபாடு**

இன்னும் சற்றுநேரத்தில் 2024 புதிய ஆண்டு பிறக்க இருக்கிறது, இப்புதிய ஆண்டினை வரவேற்க நாமும் மகிழ்வுடன் குழுமியுள்ளோம். இப்புதிய ஆண்டு நமக்கெல்லாம் மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக, சமாதானம், அமைதி, ஒற்றுமை நிறைந்த ஆண்டாக இருக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம். இப்புதிய ஆண்டில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் நேர்மையானதாக, நியாயமானதாக, வன்முறையற்ற தேர்தலாக ஆண்டவர் உதவிசெய்து வழிநடத்தும் படியாக மன்றாடுவோம். ஆண்டவரின் திருவுளப்படி அமையவிருக்கின்ற புதிய அரசு இந்தியாவை செழிப்பு மிகுந்த நாடாக, வறுமையற்ற நாடாக மாற்றுவதற்காக உழைக்கும் அரசாக இருக்க வேண்டுமென்று மன்றாடுவோம். உலக அரங்கில் இந்தியாவை தன்னிகரற்ற நாடாக உயர்த்துவதற்கு இந்த புதிய அரசு ஆவணச் செய்ய வேண்டுமென மன்றாடுவோம். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி அறிவிக்கும் ஆண்டாக, உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தும் ஆண்டாக, சிறைப்பட்டோருக்கு விடுதலைப் பறைச்சாற்றும் ஆண்டாக, கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கும் ஆண்டாக, துயருற்று அழுவோருக்கு ஆறுதல் தரும் ஆண்டாக ஆண்டவர் நமக்கெல்லாம் அருள்தரும் ஆண்டாக அளித்தருள வேண்டுமென்று நாமனைவரும் இணைந்து மன்றாடுவோம்.

**ஒவ்வொரு மன்றாட்டுக்குப் பிறகும் "ஆண்டவரே எங்கள் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்" என்று சொல்லவும்.**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் யாவரும் தூய ஆவியாரின் துணையோடு வாழ்ந்து, இறைமக்களை உம் திருவுளத்திற்கேற்ப வழிநடத்த இவ்வாண்டினை உம்மிடம் சமர்ப்பித்து மன்றாடுகிறோம்.
2. இன்று பிறக்கவிருக்கும் 2024ம் ஆண்டு மக்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக, நன்மைகள் நிறைந்த ஆண்டாக, செழிப்பு மிகுந்த ஆண்டாக அமைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. 2024ம் ஆண்டின் தொடக்க நேரத்தில் இங்கு குழுமியுள்ள யாவரும் இறைத்திட்டத்தினை உணர்ந்து, அறிந்து, உம்மைவிட்டு வெகு தொலைவு செல்லாமல் உம்மையே முழுமையாக பின்பற்றி வாழ போதுமான ஞானத்தையும், மனவலிமையும், உடல்உள்ள நலனும் அளித்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. எங்கள் குடும்பங்களில் உள்ள குழந்தைகள், இளைஞர், இளம்பெண்கள் யாவரும் கல்வியிலும், பக்தியிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும் சிறந்தவர்களாகவும், நல்ல உடல்உள்ள நலனைப் பெற்று உமக்கேற்ற பாதையில் பயணிக்க போதுமான ஞானத்தையும், அருளையும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. உலகில் நோயினால் நலிவுற்று, மனம் சோர்ந்து வாடும் மக்களுக்கு நோய்களிலிருந்து விடுதலையும், பிரச்சனைகளிலிருந்து மீட்பையும், துன்பத் துயங்களிலிருந்து ஆறுதலையும் தந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
6. இப்புதிய ஆண்டில் குழந்தைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு குழந்தைச் செல்வத்தையும், வேலைவாய்ப்பின்றி தவிப்போருக்கு வேலையினையும், கடன் தொல்லையினால் வாடுவோருக்கு விடுதலையும், குறிப்பாக யாரும் இல்லாத அனாதைகளுக்கு நீரே அடைக்கலமாகவும், ஆறுதலாகவும் இருந்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பொருத்தமானப் பாடலைப் பாடவும்** (விண்ணப்பத்தைக் கேட்பவரே)

பாடலைத் தொடர்ந்து மாண்புயர் கீதம் பாடி ஆராதனையை நிறைவுச் செய்யும் முன்பு திருத்தந்தையின் கருத்துக்களாக அவர் எடுத்திருக்கின்ற, எடுக்கின்ற அனைத்து நல்ல காரியங்களையும் இறைவனிடத்தில் ஒப்புக்கொடுத்து மன்றாடி இத்திருப்பலியை நிறைவு செய்யலாம்.

## மீட்க வந்த மீட்பர்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

உலகெங்கும் வாழும் அனைத்து கிறிஸ்தவர்களும், டிசம்பர் 25ந்தேதி அன்று கிறிஸ்து பிறப்பு பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றோம். ஆண்டவர் இயேசுவின் பிறந்த நாளன்று, அவரது பிறப்பின் திருவழிபாட்டு நினைவையே நாம் இந்நாளில் சிறப்பிக்கின்றோம். அதாவது இந்த பெருவிழாவின் மையப்பொருள் இயேசு எந்நாளில் பிறந்தார் என்பதில் அன்று, மாறாக அவர் எதற்காகப் பிறந்தார் என்பதில் இருக்கிறது. உலக மக்களை மிகவும் அன்பு செய்த தந்தையாம் கடவுள், நமது மீட்புக்காகத் தமது ஒரே மகனையே உலகிற்கு அனுப்பினார். இதனால் அவரில் நம்பிக்கை கொள்வோர் அனைவரும் மீட்படைவர். படைப்பின் தொடக்கத்தில் கடவுளின் வார்த்தையைப்

புறக்கணித்து பாவம் செய்த மனிதர்கள் மீட்பு அடையுமாறு, அந்த வார்த்தையே மனிதராகி நம்மிடையே குடிகொண்டார். தொடக்கத்திலே கடவுளோடு கடவுளாக இருந்த அந்த வார்த்தை, மனிதரான நமக்காகவும் நமது மீட்புக்காகவும் விண்ணகத்தில் இருந்து இறங்கினார். கடவுளின் ஒரே மகனான அவர் தூய ஆவியால் கன்னி மரியாவின் கருப்பையில் மனித உடலேற்று ஒரு குழந்தையானார். இந்த ஒரே இறையருளில் நிகழ்கின்ற இறை-மனித இயல்புகளின் வியப்புக்குரிய ஒன்றிப்பின் மறைபொருளை "மனித உடலேற்பு" என்று திருஅவை அழைக்கிறது.

தமது இறைத்தன்மையில் தந்தையோடு ஒரே பொருள் கொண்டுள்ள இயேசு, தமது மனிதத் தன்மையில் நம்மோடு ஒத்த பொருள் கொண்டுள்ளார். ஆகவே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மெய்யான கடவுளும் மெய்யான மனிதருமாக இருக்கின்றார் என்றும், இறை வார்த்தையானவரில் மனித இயல்பும் இறை இயல்பும் ஒன்றுக்கொன்று குழப்பமின்றி ஒன்றோடு மற்றொன்று இணைந்துள்ளது என்றும் திருஅவை நம்புகிறது. இறை விருப்புணர்வையும் மனித விருப்புணர்வையும் இயேசு கொண்டிருந்தாலும், அவரது மனித விருப்புணர்வு, எவ்வித எதிர்ப்பும் தயக்கமுமின்றி இறை விருப்புணர்வுக்கு கீழ்ப்படிந்திருந்தது. வீழ்ச்சியுற்ற மனிதகுலத்தை மீட்க ஒரு மீட்பரை அனுப்புவதாக தொடக்கத்திலேயே கடவுள் வாக்குறுதி அளித்தார். "நான் உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் எதிராகப் பகையை உண்டாக்குவேன், அது உன் தலையை நசுக்கும், நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" (தொநூ. 3:15) என்ற வார்த்தைகளில் இது அடங்கியுள்ளது. மரியா என்ற கன்னிப் பெண்ணின் வித்தாக இயேசு பிறந்ததில் கடவுளின் வாக்குறுதியும் திட்டமும் நிறைவேறின. ஆகவேதான், "கடவுள் தமது மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" என்று பவுல் கூறுகிறார்.

பாவிகளாகிய நம்மை கடவுளோடு ஒப்புரவாக்கவும், கடவுளின் எல்லையற்ற அன்பை நாம் அறிந்து கொள்ளவும், நமக்குப் புனிதத்தின் முன்மாதியாகத் திகழவும், நாம் அனைவரும் அவரது "இறைத்தன்மையில் பங்கேற்கவும்" (2பேதுரு1:4) இயேசு மனிதரானார். நமக்கு மீட்பைக் கொண்டு வருவதற்காக, இறைமகன் உண்மையாகவே உடலேற்று மனிதரானார் (யோவா 1:14). அவர் "பாவம் தவிர மற்ற எல்லா வகையிலும் நம்மைப்போல் உள்ளார்" (எபி 4:15) என்று அறிந்திருக்கிறோம். உன்னத கடவுளின் வல்லமை நிழலிட்டதால், என்றும் வாழும் இறைமகனை கன்னி மரியா தமது கருப்பையில் கருத்தாங்கினார். வானதூதர் கன்னி மரியாவுக்குத் தூதுரைத்த வேளையில், "தூய ஆவி உம்மீது வரும்" (லூக்.1:35) என்று உணர்த்தினார். தூய ஆவியால் கன்னியிடம் கருவான இறைமகன் இயேசு உண்மையான மனித உடலைக்

கொண்டிருந்தார். அதன் வழியாக கண்ணுக்குப் புலப்படாதவராக இருந்த கடவுள் கண்ணால் காணப்படும் ஒருவராக மாறினார். இயேசு தமது இறைத்தன்மையில் விண்ணகத் தந்தையின் மகனாகவும், தமது மனிதத்தன்மையில் கன்னி மரியாவின் மகனாகவும் விளங்குகிறார். ஆயினும் இயேசு ஒரே ஆளாக உள்ளதால், அவர் இவ்விரு தன்மைகளிலும் உண்மையாகவே இறைமகனாக இருக்கிறார்.

"நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே, யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய் ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப் போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்" என்ற மீக்காவின் முன்னறிவிப்பு இயேசுவின் பிறப்பில் நிறைவேறியது. அவ்வாறே, "ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார், ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும், அவரது பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும் என எசாயா 9:6 முன்னுரைத்ததும் இயேசுவின் பிறப்பால் நிறைவெய்தியது.

இறைத்தந்தையின் என்றும் வாழும் மகனாக உள்ள இயேசு, அறிவார்ந்த சிந்தனையைக் கொண்ட ஓர் மனித உடலை ஏற்றுக்கொண்டார். தமது மனித அறிவாற்றலால் இயேசு பலவற்றையும் அனுபவத்தின் வழியாக கற்றுக்கொண்டார். ஆனால் இறைமகனாகிய அவர், தம் தந்தையாகிய கடவுளை ஆழமாகவும் நேரடியாகவும் அறிந்திருந்தார். அதுபோலவே மனிதரின் மறைவான எண்ணங்களையும் உய்த்துணர்ந்தார். நமது மீட்புக்காகத் தந்தையோடும் தூய ஆவியோடும் அவர் வகுத்த இறைத்திட்டங்களை, மனித விருப்புணர்வோடு இவ்வுலக வாழ்வில் நிறைவேற்ற நினைத்ததாகத் திருச்சபை நமக்கு கற்பிக்கிறது.கிறிஸ்துவின் வாழ்வு முழுவதுமே ஒரு வெளிப்பாடு. இயேசுவின் உலக வாழ்வில் நாம் காண்பவை அனைத்தும், இறைமகனுக்கு உரிய அவரது காண இயலாத மறைபொருளுக்குள் நம்மை இட்டுச் செல்கின்றன. கிறிஸ்துவின் பிறப்பில், ஒரு குழந்தையின் வலுவின்மை வழியே விண்ணகத்தின் மாட்சி வெளிப்பட்டது. இயேசுவின் மனித வாழ்வில் நிகழ்ந்த புதுமைகள், பாடுகள், இறப்பு ஆகிய அனைத்தும் அவரது இறை ஆளுமைக்கே உரியவை. ஆயினும் அவர் இவ்வுலகில் மனிதராக வாழ்ந்தபோது, நம்மை அறிந்து, அன்பு செய்யக் காரணமாக இருந்த அவரது இதயம் நமது மீட்புக்காகவே குத்தி ஊடுருவப்பட்டது.

"சிலுவையில் இயேசு சிந்திய ரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும், விண்ணிலும் மண்ணிலும் உள்ள அனைத்தையும் அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்கவும் தந்தையாம் கடவுள் திருவுளம் கொண்டார்" (கொலோ 1:20). இவ்வாறு மனிதர்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக தம்மைப் பலியாக்கி, நம்மை மீட்கவே இறைமகன் இவ்வுலகில் பிறந்தார். ஆகவே, "மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வு

பெறுவர்" (யோவா 3:36) என்ற வாக்குறுதி நமது மீட்புக்கு வழியாகட்டும். மீட்பர் இயேசுவில் நம்பிக்கை கொண்டவர்களாய், கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடி மகிழ்வோம். அனைவருக்கும் எமது வாழ்த்துகள்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களைப் பாதுகாப்போம்

உண்மையில், பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது நம் சமூகத்தை ஆட்டிப்படைக்கும் ஒரு நஞ்சுக் களையாகும், இது வேரிலேயே களையப்பட வேண்டும் என்றும், இந்த வேர்கள் கலாச்சார மற்றும் மனரீதியானவை காழ்ப்புணர்வு, தன்வசமாக்கிக் கொள்ளுதல், அநீதி ஆகியவை மண்ணில் வளரக்கூடியவை என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பெண்களின் மாண்பு எப்போதும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். ஒரு பெண் ஒரு பொருளைப் போன்று நடத்தப்படும் போது, அவருடைய மாண்பு காக்கப்படாது, அவர் வெறும் சொத்தாக மட்டுமே மதிக்கப்படுவார் என்றும், இதனால் அவர் அடக்கியாளப்படும் நிலைக்குத் தள்ளப்படுவார் என்றும் விளக்கியுள்ளார். ஆண்டவர் இயேசு நாம் சுதந்திரமாகவும் முழு மனித மாண்புடனும் வாழ விரும்புகிறார்!.

பெண்கள் உடல் மற்றும் உளவியல் ரீதியான முறைகேடுகளை எதிர்கொண்டுள்ள நிலையில், நாம் ஒருவருக்கொருவர் மரியாதை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியாயமான மற்றும் சமநிலையான உறவுகளின் வடிவங்களை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை. முறைகேடு, சுரண்டல், ஓரங்கட்டப்படுதல் மற்றும் தேவையற்ற அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட பெண்களாகிய குரலற்ற நமது சகோதரிகளுக்காக நாம் குரல் கொடுக்கவேண்டியது நமது கடமையும் பொறுப்புமாகும். இந்தக் காரியத்தில் நாம் அலட்சியமாக இருக்க வேண்டாம்! நாம் இப்போதே, அனைத்து நிலைகளிலும், உறுதியுடனும், துணிவுடனும், விரைவாகவும், செயல்பட வேண்டும் என்றும் விண்ணப்பித்துள்ளார் திருத்தந்தை.

### மனிதநேயம் மற்றும் உறவு பாலங்களை உருவாக்குகிறது கலை!

கலை என்பது, அதிலும் குறிப்பாக மதக் கலை என்பது, கருணை, இரக்கம் மற்றும் ஊக்கம் ஆகியவற்றின் செய்தியை விசுவாசிகளுக்கு மட்டுமல்ல, சந்தேக மனம் கொண்டவர்களுக்கும், தொலைந்து போனது, நிச்சயமற்றது அல்லது தனிமையில் இருப்பதாக உணர்பவர்களுக்கும் கொண்டு வர முடியும் என்று தெரிவித்தார் திருத்தந்தை வத்திக்கான் அருங்காட்சியகத்தின் கலைப்பொருட்களைப் பாதுகாக்கும் அதன் பாதுகாவலர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கலை எப்போதும் நமது ஆன்மாவுடன்

பேசுகின்றது என்றும் எடுத்துக்காட்டினார். கடவுளுடைய படைப்பின் அழகு மற்றும் நமது மனித வாழ்க்கை மற்றும் அழைப்பின் வளமை மற்றும் மறைபொருள் ஆகியவற்றிற்கு மனதையும் இதயத்தையும் திறக்க, கலைகளின் பல வடிவங்களில் உள்ள திறனை பாராட்டுவதற்கான உறுதியான அடையாளமாக உங்களின் அர்ப்பணிப்பு உள்ளது என்றும் அவர்களைப் பாராட்டினார் திருத்தந்தை. உங்களின் பங்களிப்பான இப்பாதுகாப்புப் பணி கடந்த காலத்தின் இந்த விலைமதிப்பற்ற பாரம்பரியத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், கலை, வரலாறு, கலாச்சாரம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றுக்கு இடையேயான ஆழமான தொடர்புகளைப் பிரதிபலிக்க புதிய தலைமுறைகளை அழைக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார் திருத்தந்தை.

**மனித வர்த்தகத்திற்கு எதிராகப் பணியாற்றிய சகோதரிகளுக்கு விருது!**

அருள்சகோதரி செலி தாமஸ் பொதுநலத்திற்கான விருதையும், தாய்லாந்தைச் சேர்ந்த அருள்சகோதரி Francoise Jiranonda மற்றும் நைஜீரியாவைச் சேர்ந்த அருள்சகோதரி Patricia Ebegbulem ஆகியோருக்கு மனித வர்த்தகத்திற்கு எதிரான பணிகளுக்காக மேலும் இரண்டு முக்கிய விருதுகள் வழங்கப்பட்டன என்று ஆசியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மனித வர்த்தகத்திற்கு எதிரான இயக்கத்திற்கு கத்தோலிக்கஅருள்சகோதரிகளின் பங்களிப்பைக் கொண்டாடும் விதமாக இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இவ்விருது வழங்கும் விழா கடந்த அக்டோபர் மாதம் 31-ஆம் தேதி இலண்டனில் நடைபெற்றது என்றும் அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவிக்கிறது.

இவ்விருது குறித்து தெரிவித்த அமலோற்பவ அன்னை சபையைச் சேர்ந்த அருள்சகோதரி Seli Tho mas அவர்கள், மனித வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டு அவமானம் மற்றும் அதிர்ச்சியை அனுபவிக்கும் குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் அனைவருக்கும் இது "நம்பிக்கையின் சின்னம்" என்று கூறினார். மனித வர்த்தகத்தில் இலிருந்து தங்கள் சமூகங்களைப் பாதுகாப்பதில் துணிச்சல், படைப்பாற்றல், ஒத்துழைப்பு மற்றும் சாதனை ஆகியவற்றைக் காட்டியதற்காக சகோதரி செலி மேலும் இரண்டு அருள்சோகோதரிகளுடன் இந்த விருதைப் பெற்றார் என்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள கிருஷ்ணகரில் அருள்சகோதரி செலி தாமஸ் பணியாற்றி வருகின்றார் என்றும் சுரண்டல் மற்றும் வலைப்பின்னல்களில் சிக்கித் துயருறும் இளம் பெண்களைக் காப்பாற்றி வருவதாகவும் ஆசியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலவச சட்ட உதவிகளை வழங்குவதன் வழியாகவும், பாதுகாப்பான இடம்பெயர்வு மற்றும் மனித வர்த்தகம் குறித்து பெண்களுக்கும் சமூகத்துக்கும் தெரிவிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் பயிற்சி முகாம்களை நடத்துவதன் வழியாகவும் அவர்களுக்கு உதவி வரும் அருள்சகோதரி

செலி தாமஸ் கிருஷ்ணாநகரின் விலைமகளிர் விடுதிகளில் வாழும் அப்பெண்களின் குழந்தைகளையும் அவர் அணுகி பல்வேறு வழிகளில் உதவி வருகிறார்.

## சுடர் வாசகர் போட்டி - 104

1. வத்திக்கானின் விசுவாசக் கோட்பாட்டுத் துறையின் தலைவர்
2. லூக்கா 20:34-38, இயேசு கூறியது
3. புனித அந்திரேயா திருத்தூதர்
4. புனித ஆன்டுரு டுங் லாக்
5. அரு. மதலேன் மொரானோ
6. புனித பெரிய லியோ திருத்தந்தை
7. திருத்தந்தை 5ம் பவுல்
8. மக்கபேயர்
9. புனித ஆர்த்திமெதே சாத்தி
10. புனித அந்திரேயா திருத்தூதர்
11. 11ம் பத்திநாதர் 1925
12. மார்ட்டின் லூத்தர்
13. புனித ஆர்த்திமெதே சாத்தி
14. லூத்தரன் பேராலயம்
15. புனித சார்லஸ் பொரேமெயோ

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

C. R. Daisy, Lawspet

Sr. Jebamani, Chennai

A. Charles Rajasekar, Dindigul

## சுடர் வாசகர் போட்டி 105

1. 450 ஆண்டுகளாக அழியாமல் இருக்கும் புனிதரின் உடல் எது?
2. "யாரும் அழிந்து போகாமல் மனம்மாற வேண்டும்" என்று யார் விரும்புகிறார்?
3. "பாம்பின் தலையை நசுக்குபவள்" என்பதன் சுருக்கமான பெயர் என்ன?
4. "உன் தாய் குணமடைய உன்மன்றாட்டே போதுமானது" யார் யாரிடம் கூறியது?
5. "ஏழைகளின் இரக்கம் காட்டுபவர்" என்று புகழப்பட்டவர் யார்?
6. புனித யோவான் எந்த நகரில் எந்த ஆண்டு இறந்தார்?
7. "எப்ராத்தா" வேறுபெயர் என்ன?
8. புனித சவேரியார் பிறந்த அரண்மனையின் பெயர் என்ன?
9. திருவருகைக் காலத்தில் இரண்டாவதாக ஏற்றப்படும் மெழுகுத்திரியின் பெயர் என்ன?
10. ஜுவான் டியாகோ எந்த மலையில் மரியன்னையை கண்டார்?
11. புனித லூசியும் அவர் தாயும் யாருடைய கல்லறை அருகே சென்று செபித்து குணமடைந்தனர்?
12. கான்டி நகர் புனித ஜான் சாகும்வரை பேராசிரியராக பணியாற்றிய பல்கலைக்கழகம் எது?
13. "இடியின் மகன்" என்று அழைக்கப்பட்ட திருத்தூதர் யார்?
14. "இஸ்ரயேல் மக்களை ஆளப்போகும் யூதரின் அரசர் எங்கே" யார் யாரிடம் கூறியது?
15. அருட்சகோதரி எதற்கான விருதை பெற்றார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| தீபகம் | பெயர்: ................................ |
| தொன்போஸ்கோ மறைப்பணி மையம் | முகவரி: ................................ |
| 45, லேண்டன்ஸ் சாலை | ................................ |
| கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010. | ................................ |
| தொலைப்பேசி: 044 - 26428162. | ............................ |

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

மரியாள் இறைவனின் தாய்
புனிதரகள் பேசில் மற்றும் கிரகோரி நயசியன்
இயேசு காணிக்கையாக அளிக்கப்பட்ட விழா
இயேசுவின் திருமுழுக்கு
பொதுக்காலம் இரண்டாம் ஞயிறு
அருளாளர் லூயிஸ் வரியாரா
பொதுக் காலம் மூன்றாம் ஞயிறு
அருளாளர் லவுரா விக்குனா
புனித பிரான்சிஸ் சலேசியார்
புனித பவுல் மனமாற்றம்
புனித திமொத்தேயு, தீத்து திருத்தூதர்கள்
அரு. ப்ரோனிஸ்லாஸ் மார்க்குவிஸ்
புனித தொன் போஸ்கோ

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

இயேசுவின் பணியாளர் புனித பவுல்
இறைவனின் தாய்... நம் அனைவரின் தாய்...
இறைவன் தந்த இனியவர் - தொன் போஸ்கோ
திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி"பதில்களை டிசம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | | தானி. 7: 2-14 | லூக். 21: 29-33 |
| 2 | ச | | தானி. 7: 15-27 | லூக். 21: 34-36 |
| 3 | **ஞா** | **திருவருகைக் காலம் முதல் ஞாயிறு** | **I.** எசா. 63: 16-17: 64:1,3-8<br>**II.** 1கொரி. 1: 3-9 | மாற்கு 13: 33-37 |
| 4 | தி | புனித பிரான்சிஸ் சவேரியார் விழா | எரே.1: 4-8 | மாற்கு 16: 15-20 |
| 5 | செ | | எசா. 11: 1-10 | லூக். 10: 21-24 |
| 6 | பு | புனித நிக்கோலாஸ் | எசா. 25: 6-10 | மத். 15: 29-37 |
| 7 | வி | புனித அம்புரோஸ் | எசா. 26: 1-6 | மத். 7: 21,24-27 |
| 8 | **வெ** | **புனித கன்னிமரியாவின் அமல உற்பவம் பெருவிழா** | **I.** தொ.நூ. 3: 9-15,20<br>**II.** எபேசி. 1:3-6 , 11-12 | லூக். 1: 26-38 |
| 9 | ச | புனித ஜான் டியேகோ கௌற்லாற்றோயாற்சின் | எசா. 30:19-21,23-26 | மத். 9: 35-10: 1,6-8 |
| 10 | **ஞா** | **திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு** | **I.** எசா. 40: 1-5,9-11<br>**II.** 1பேதுரு. 3: 8-14 | மாற்கு 1: 1-8 |
| 11 | தி | புனித முதலாம் தமசுஸ்: திருத்தந்தை | எசா. 35: 1-10 | லூக். 5: 17-26 |
| 12 | செ | குவாதலூப் நகர் புனித கன்னி மரியா | எசா. 40: 1-11 | மத். 18: 12-14 |
| 13 | பு | புனித லூசி கன்னி, மறைச்சாட்சி, நினைவு | எசா. 40: 25-31 | மத். 11: 28-30 |
| 14 | வி | சிலுவையின் புனித ஜான் | எசா. 41: 13-20 | மத். 11:11-15 |
| 15 | வெ | | எசா. 48: 17-19 | மத். 11: 16-19 |
| 16 | ச | | சீ.ஞா. 48: 1-4, 9-11 | மத். 17: 10-13 |
| 17 | **ஞா** | **திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு** | **I.** எசா. 61: 1-2,10-11<br>**II.** 1தெச. 5: 16-24 | யோவா.1:6-8,19-28 |
| 18 | தி | | எரே. 23: 5-8 | மத். 1: 18-24 |
| 19 | செ | | நீத.13: 2-7,24-25 | லூக். 1: 5-25 |
| 20 | பு | | எசா. 7: 10-14 | லூக். 1: 26-38 |
| 21 | வி | புனித பீட்டர் கனிசியுஸ் | இ.பா. 2: 8-14 | லூக். 1: 39-45 |
| 22 | வெ | | 1சாமு. 1: 24-28 | லூக். 1: 46-56 |
| 23 | ச | கான்டி நகர் புனித ஜான் | மலாக். 3: 1-4, 4: 5-6 | லூக். 1: 57-66 |
| 24 | **ஞா** | **திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு** | **I.** சாமு. 7:1-5,8-12,16<br>**II.** உரோ. 16: 25-27 | லூக். 1: 26-38 |
| 25 | **தி** | **கிறிஸ்து பிறப்பு** இரவு திருப்பலி **பெருவிழா** | **I.** எசா. 9: 2-4, 6-7<br>**II.** தீத். 2: 11-14 | லூக். 2: 1-14 |
| 26 | செ | புனித ஸ்தேவான் விழா | திப. 6: 8-10,7: 54-60 | மத். 10-17-22 |
| 27 | பு | புனித யோவான் விழா | 1யோவா. 1: 1-4 | யோவா.20:2-8 |
| 28 | வி | புனித மாசில்லாக் குழந்தைகள் விழா | 1யோவா. 1: 5-2:2 | மத். 2: 13-16 |
| 29 | வெ | புனித முதலாம் சில்வெஸ்டர் | 1யோவா. 2: 3-11 | லூக். 2: 22-35 |
| 30 | ச | | 1யோவா. 2: 12-17 | லூக். 2: 36-40 |
| 31 | **ஞா** | **இயேசு மரியா, யோசேப்பின் திருக்குடும்ப விழா** | **I.** தொ.நூ.15: 1-6,21:1-3<br>**II.** எபி. 11:8,11-12,17-19 | லூக். 2: 22-40 |